ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# ஆண்டாள்
# திருநாள் பாட்டு

இன்றோ திருவாடிப்பூரம் எமக்காக
அன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள் - குன்றாத
வாழ்வான வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து
ஆழ்வார் திருமகளாராய்

பெரியாழ்வார் பெண் பிள்ளையாய் ஆண்டாள் பிறந்த
திருவாடிப்பூரத்தின் சீர்மை - ஒரு நாளைக்கு
உண்டோ மனமே! உணர்ந்து பார் ஆண்டாளுக்கு
உண்டாகில் ஒப்பிதற்கும் உண்டு

அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்
தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய் - பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து

---